சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.05.2021

## <u>சாதாரணக்கூட்டம்</u>

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் வைகாசி மாதம் 17–ஆம் நாள் (மே திங்கள் 31–ஆம் நாள்:–31.05.2021) திங்கள் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 2019–2020–ஆம் நிதியாண்டிற்கு பொங்கல் தற்காலிக மிகை ஊதியம் வழங்க வரப்பெற்ற அரசாணை எண்.1, நிதி (படிகள்) துறை, நாள்.04.01.2021 மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.0092/2021/சி1)**
**தீர்மான எண், நாள் 255, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் அரசாணை (பல்வகை) எண்.01, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3(2)) துறை, நாள்.06.01.2021–இன்படி உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி 2020–2021ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள் ஆகிய 8 பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கீழப்பூலானந்தபுரம் மற்றும் பள்ளிக்கோட்டைபட்டி ஆகிய பகுதிகளில் தலா 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள மறு ஒப்பந்தப்புள்ளி கோரி 21.02.2021ம் அன்று தினமணி தினசரி நாளிதழில் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூ.20362/– M/s Express Publication (Madurai) Private Limited அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2380/2018/இ1)**
**தீர்மான எண், நாள் 256, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான IUDP கடை எண்.20, திரு.கருப்பையா பெயரில் உள்ளது. திரு.கருப்பையா த/பெ.ராமையா பிள்ளை என்பவர் கடந்த 08.09.2017ல் காலமாகிவிட்டார். மேற்படி திரு.கருப்பையாவிற்கு திரு.ஆர்.நாராயணன், த/பெ.ராமையாபிள்ளை என்பவர் நான் தான் வாரிசு என மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையத்தில் வழக்கு தொடரப்பட்டு அசல் வழக்கு எண்.145/2018ன்படி, தீர்ப்புரையின்படி, திரு.ஆர்.நாராயணன், திரு.அழகம்மாள், திரு.நாகராஜ் மூவரும் வாரிசுதாரர் ஆவர் என இறுதி தீர்ப்பு வழங்கியதைத் தொடர்ந்து, உத்தமபாளையம், வட்டாட்சியர் அலுவலகத்தில் வாரிசு சான்று வாங்கப்பட்டு, திரு.ஆர்.நாராயணன் பெயரில் மேற்படி கடையை பெயர் மாற்றம் செய்வதற்கு நோட்டரி பப்ளிக்கில் மற்ற இருவரிடமும் கையெழுத்து பெற்று இந்நகராட்சியில் திரு.ஆர்.நாராயணன் பெயரில் பெயர் மாற்றம் செய்ய மனு செய்ததின்படி, நகர்மன்ற தீர்மான எண்.771/2019ன்படி, பெயர் மாற்றம் செய்து தொடர்ந்து கடையை நடத்தி வந்தார். திரு.ஆர்.நாராயணன் த/பெ.ராமையா பிள்ளை என்பவர் கடந்த 14.09.2020ம் தேதி காலமாகிவிட்டபடியால், அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ன்படியும், வருவாய் ஆய்வரின் 19.10.2020ன்படியும், IUDP கடை எண்.20–ஐ பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் டெபாசிட் தொகை ரூ.20000/– என நிர்ணயம் செய்யவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் உத்தேச செலவுத் தொகை ரூ.50000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3169/2020/அ2)**

தீர்மான எண், நாள் 257, நாள். 31.05.2021

தீர்மானம்

*******

**பொருள் எண்.4**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை செய்யும் கூடத்திற்கு (Slaughter House) 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தல் (Renewal) மேற்கொள்ளும் பொருட்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.8800/– (Water Act –Rs.4400/- and Air Act –Rs.4400/-) செலுத்த வேண்டும் என மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனி அவர்களின் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்கண்ட தொகையினை வங்கி வரைவோலை எடுத்து தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தேனிக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**3. தற்போது சட்டமன்ற பொதுத் தேர்தல்–2021 நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மேற்கண்ட செலவினத்தை ஆணையாளர்(பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1112/2009/எச்1)**

தீர்மான எண், நாள் 258, நாள். 31.05.2021

தீர்மானம்

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தொற்று வேகமாக பரவுவதை தடுக்கவும் கொரோனா தொற்று அதிகமாக உள்ள பகுதிகளில் தடுப்பு அரண் அமைத்து மேற்படி தொற்று பரவமால் தடுக்க தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை (COVID-19) தொற்றால் பாதிக்கப்படும் பகுதிகளை தடுப்பு அரண் (Barricade) அமைத்து, மேற்படி தொற்று பரவாமல் தடுக்கும் பணிக்குத் தேவையான மரக்கம்புகள், ஜி.ஐ.ஷீட், பிவிசி கயிறு மறைப்பு மற்றும் 4"x3" பிளக்ஸ் கொண்ட கொரோனா வாசகத்தினால் ஒட்டுதல் உள்ளிட்ட பணிக்கு 19.04.2021 தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு, பதிவிற்கும் வைக்கப்படுகிறது,

| வ எண் | விவரம் | திரு.கா.வனராஜ், தொகை ரூ.பை | திரு,ஆர்.பரமானந்தன், தொகை ரூ.பை |
|---|---|---|---|
| 1. | மரக்கம்புகளால் சாலையின் குறுக்கே தடுப்பு அரண் அமைக்க 1 மீட்டருக்கு | 216 | 220 |
| 2. | ஜி.ஐ.ஷீட் கொண்டு தடுப்பு அமைத்தல் 1 எண்ணம் | 1200 | 1250 |
| 3. | பிவிசி கயிறு கொண்டு மறைப்பு அமைத்தல் – 1 மீட்டருக்கு | 45 | 50 |
| 4. | 4"x3" பிளக்ஸ் – கொரோனா வாசகம் அமைத்தல் – 1 எண்ணம் | 400 | 450 |

மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கா.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு ஆன செலவின தொகை ரூ.1,73,141/—யை 1920—ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— பதிவு செய்யலாம்.**
**தீர்மான எண், நாள் 259, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.6

துப்புரவு அலுவலராக பணியாற்றி 31.03.2010ம் அன்று ஓய்வு பெற்ற திரு.பா.பாக்கியமாதவன் அவர்களின் பணி பதிவேட்டில் தொகுதி —III பக்கம் எண்.15—இல் போடி நகராட்சியில் அரசாணை எண்.120 நிதித் துறை நாள்.02.02.1990 மற்றும் அரசாணை எண்.304, நிதித்துறை நாள்.28.03.1999—இன்படி ஊதியம் 01.06.1988 முதல் மறு நிர்ணயம் செய்து கோப்பு எண்.ந.க.எண்.1220/1990/எச்1, நாள்.09.06.1990 போடி நகராட்சி ஆணையரால் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி ஓய்வு பெற்ற துப்புரவு அலுவலர் சின்னமனூர் நகராட்சியில் 13.09.1988 முதல் 20.09.1988 பணியிடை ஏற்பு காலம் 21.09.1988 முதல் 28.02.1989 வரை பணி காலத்தில் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி உள்ளார்.

அதன்படி, சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 25.02.2020ம் தேதிய ந.க.1568/2020/எல்2 எண்ணிட்ட கடிதத்தில் மேற்படி துப்புரவு அலுவலருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் பணிபுரிந்த நகராட்சியில் 5வது ஊதியக்குழு நிலுவைத் தொகை கோரிய மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்திதை தெரிவிக்க கோரப்பட்டுள்ளது.

எனவே, தனியர் இந்நகராட்சியில் பணிபுரிந்த காலத்திற்கு பிடித்தம் செய்த தொகை ரூ.1849/— வட்டி ரூ.13401/— என மொத்தம் ரூ.15250/— மட்டும் திரு.பா.பாக்கிய மாதவன், துப்புரவு அலுவலர் ஓய்வு அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:— மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள் 260, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன வண்டி எண்.TN60S2751க்கு சில மராமத்துப் பணிகள், கொரோனா பணியின் அவசர அவசியம் கருதி, பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு செலவினம் தொகை ரூ.18000/—க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 10.05.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | சாய் மல்டிபிராண்ட் கார் கேர், சின்னமனூர் | ரூ.17950/— |
| 2. | **AMN மோட்டார், கம்பம்** | ரூ.19150/— |

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் சாய் மல்டிபிராண்ட் கார் கேர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்ததாரரின், விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம் மேலும் நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மற்றும் அதற்கான தொகை வழங்குவதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)**

**தீர்மான எண், நாள்** **261, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 பள்ளிக்கோட்டைபட்டிக்கு செல்லும் குடிநீர் பிரதானக் குழாய், பி.டி.ஆர்.வாய்க்கால் பராமரிப்புப் பணி மேற்கொள்ளும் பொழுது உடைப்பு ஏற்பட்டதால், உரிய உபகரணங்கள் மூலம் மேற்படி உடைப்பினை சரி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

குடிநீர்ப் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணியினை 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—இன் கீழ், ஒப்பந்ததாரர் திரு.கா.வனராஜ் என்பவர் மூலம் மேற்கொண்ட வகையில் ஆன செலவினத் தொகை ரூ.19396/—யை மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **பதிவு செய்யலாம். (ந.க.எண்.1414/2021/இ2)**

**தீர்மான எண், நாள்** **262, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.9

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் இரண்டாம் அலை தொற்று வேகமாக பரவுவதை தடுக்கவும் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து நகராட்சி பகுதியில் ஒலிபெருக்கி மற்றும் ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு ஒலிபெருக்கி மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்கள் வாங்கும் பணிக்கு 14.04.2021 தேதியன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | எண்ணம் | திரு.கா.வனராஜ், தொகை ரூ.பை | திரு,ஆர்.பரமானந்தன், தொகை ரூ.பை |
|---|---|---|---|---|
| 1. | மைக்செட் ஆம்பிள்பையர் | 1 எண்ணம் | 14000.00 | 14500.00 |
| 2. | சிறிய ரேடியோ குழாய் | 1 எண்ணம் | 1100.00 | 1150.00 |
| 3. | பெ.யி அரைகுழாய் | 1 எண்ணம் | 1300.00 | 1350.00 |
| 4. | மைக் | 1 எண்ணம் | 1250.00 | 1300.00 |
| 5. | பெரிய யூனி. | 1 எண்ணம் | 1400.00 | 1450.00 |
| 6. | சிறிய யூனிட் | 1 எண்ணம் | 1300.00 | 1350.00 |
| 7. | 1/8 வயர் | 1 காயில் | 900.00 | 900.00 |
| 8. | சுவிட் பாக்ஸ் | 1 எண்ணம் | 550.00 | 550.00 |
| 9. | மெமரி கார்டு மற்றும் கொரோனா வாசகம் பதிவு | 1 எண்ணம் | 350.00 | 370.00 |
| 10. | 5 மைக்செட் பொருத்தும் பணிக்கு கூலி | 1 நபர் | 1000.00 | 1000.00 |

மேற்கண்ட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கா.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம், பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பொருள்களை வாங்கிய வகையில் செலவின தொகை ரூ.1,30,312/—யை 1920—ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **பதிவு செய்யலாம்.**

**தீர்மான எண், நாள்** **263, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.10

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் TN60S2193 ஜெட்ராடிங் வாகனம் மற்றும் TN603761 குடிநீர் லாரி ஆகிய வாகனத்திற்கு 2021—2022ம் ஆண்டிற்கான சாலைவரி (Road Tax) தொகை ரூ.19204/—யை இந்நகராட்சியின் ஓட்டுனர் திரு.எம்.சந்தனமகாராஜன் அவர்களால் உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்திய வகையில் திரு.எம்.சந்தனமகாராஜன் ஒட்டுநருக்கு இத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2.மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2996/2001/இ2)**

**தீர்மான எண், நாள்** **264, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.11

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(4D) No.2, நாள்.26.02.2021இன்படி நகராட்சியின் பொது நிதியின் கீழ் அம்மா உணவகத்தில் பணிபுரியும் சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு தினக்கூலியாக (தின ஊதியம் அடிப்படையில்) ரூ.250/– வீதம் வழங்கப்பட்டு வந்தது. மேற்காணும் ஊதியம் 2013 முதல் தினக்கூலி அடிப்படையில் கடந்த ஏழு வருடங்களாக அதிகப்படுத்தப்படாமல் வழங்கப்பட்டு வந்துள்ளது. எனவே மேற்காணும் விவரங்களை கருத்தில் கொண்டு தினக்கூலி அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த ஊதிய விகிதத்தினை ரூ.250/– இருந்து ரூ.325/– ஆக திருத்தப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ஊதிய விகிதம் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பதிவு செய்யலாம்.**
**தீர்மான எண், நாள்** **265, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.12

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை மிக வேகமாக பரவி வருவதால் அதனை தடுக்கும் பொருட்டு நகராட்சி பணியாளர்கள் பல்வேறு தடுப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் அடிப்படையில் நகராட்சி பகுதிகளில் தினந்தோறும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக பரவி வருவதால் இறப்பின் எண்ணிக்கையும் அதிகம் இருப்பதால், பாதிக்கப்பட்ட நபர்களின் வீட்டில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் போது, மேற்படி தொற்றினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் இறுதி சடங்கினை உரிய அரசு விதிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உரிய பாதுகாப்பு உபகரணங்களை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு முழு பாதுகாப்பு உடற்கவசம் (PPE Kit) வழங்க வேண்டியுள்ளதால் 100 எண்ணம் முழு பாதுகாப்பு உடற்கவசம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.76000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**
**3. முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.1795/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **266, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு (2021–2022ம் ஆண்டிற்கு) கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS வாங்குதல், கணினி மற்றும் பிரிண்டர் தொடர்புடைய தளவாட சாமான்கள், புதிய டோனர்கள் மற்றும் Network தொடர்புடைய பொருட்கள் வாங்குவதற்கும் மேலும் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS-க்கான ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1456/2020/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **267, நாள். 31.05.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.14**

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை மிக வேகமாக பரவி வருவதால் அதனை தடுக்க வேண்டிய அவசர அவசிய சூழ்நிலையில் நகராட்சி பணியாளர்கள் தீவிரமாக பணியாற்றி வருகின்ற சூழ்நிலையில் DBC களப்பணியாளர்களை கொண்டு தினந்தோறும் வீடு வீடாக சென்று, காய்ச்சல் மற்றும் கொரோனா தொற்றிற்கான அறிகுறிகள் ஏதும் தென்படுகின்றதா என கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு தேவையான 6 எண்ணம் Pulse Oxymeter மற்றும் 6 எண்ணம் Thermal Scanner வாங்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**<br>**3. தனி அதிகாரி மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **268, நாள். 31.05.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2021–2022ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சாலைவரி (Road Tax) தொகையினை ரொக்கமாக செலுத்த உத்தமபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் நேரில் சென்று கேட்பு அறிய பெற்றதை தொடர்ந்து சாலை வரிக்கான செலவினத் தொகை ரூ.28380/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. பொது சுகாதார பணியின் அவசியம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நன்னடத்தை விதி நடைமுறையில் உள்ளதால் தனி அதிகாரி (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவு மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **269, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.21085/பி3/2016, நாள்.31.08.2016–இன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ஆம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை, சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1– இன்படி, 01.08.2019 முதல் 31.03.2021 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பான பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம்பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.176, நாள்.31.12.2020–இன்படி ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை ந.க.எண்.0576/2015/எச்1, நாள். 31.12.2020–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மை பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் **31.03.2021** உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், அண்டை மாவட்டமான இம்மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயம் இருப்பதாலும் மற்றும் **2021**ம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதி அமுலில் உள்ளதால், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று (01.04.2021 முதல் 30.06.2021 வரை) உள்ள மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நன்னடத்தை விதி அமுலில் உள்ள புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை கருத்தில் கொண்டு ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.0576/2020/எச்1)**

**தீர்மான எண், நாள்** **270, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.17

சின்னனூர் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை மிக வேகமாக பரவி வருவதால் அவற்றை தடுக்க வேண்டிய அவசிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தினந்தோறும் நடைபெறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான அளவு கிருமி நாசினி இருப்பு வைத்திருக்க வேண்டும் என அறிவுறுத்தியதைத் தொடர்ந்து தற்போது நகராட்சி பகுதிகளில் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேவையான அளவு கிருமி நாசினி இருப்பில் இல்லாததால் **1500** லிட்டர் லைசால் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**

**3. தனி அதிகாரி மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **271, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15, ராஜா ரைஸ்மில் 2வது தெரு, கிழக்குப் பகுதியில் உள்ள பாலம் தாழ்வாகி கழிவு நீர் கடந்து செல்ல முடியாத நிலையில் இருப்பதால் அப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது. எனவே பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி புதியதாக பாலம் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் (ம) வடிகால் நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழஙகலாம். (ந.க.எண்.1893/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **272, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.19**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தில் இருந்து பெறப்படும் வாடகை மீதான சரக்கு மற்றும் சேவை வரி (GST) ஒவ்வொரு மாதமும் பணம் செலுத்த கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டி உள்ளதால் 2021–2022ம் ஆண்டுகளுக்கு உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4949/2017/அ2)**

**தீர்மான எண், நாள்** **273, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை மிக வேகமாக பரவி வருவதால் அவற்றை தடுக்கும் பொருட்டு நகராட்சிப் பகுதிகளில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் (DBC) மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தினந்தோறும் வீடு வீடாகச் சென்று DBC களப்பணியாளர்கள் மூலமாக காய்ச்சல் கணிடறியும் பணியும் மற்றும் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டு வீட்டு தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி தரும் பணியினை மேற்கொண்டு வருவதால் மேற்படி பணியாளரின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான கைகழுவும் திரவம் (Hand Sanitizer) 50 லிட்டர் வாஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம்.**
**3. முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **274, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

இந்நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வடக்கு பக்கம் மற்றும் தெற்கு பக்கம் கடைகள் கட்டி மாத வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு கடைகள் கட்டி மறுப்பு தெரிவித்து, திருமதி.ச.ஈஸ்வரி, க/பெ.சங்கர் மனுதாரர் வழக்கு எண்.W.P.(MD) No.4063/OF2021 மற்றும் திரு.ஆர்.முருகேசன், த/பெ.பொன்னையா என்பவர் வழக்கு எண்.W.P.(MD) 4065/OF2021 இருவரும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.10000+10000=20000/–யை (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) திரு.கே.மகேந்திரன், அரசு வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு:–** **அவசர அவசியம் கருதி முன் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி தொகையை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4294/2020/அ2)**

**தீர்மான எண், நாள்** **275, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா இரண்டாம் அலை தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினியான லைசால் 1500 லிட்டர் வாங்கும் பணிக்கு 27.05.2021ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங, திண்டுக்கல் | ரூ.280 (GST 18% நீஙகலாக) |
| 2. | ஸ்ரீ தாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், கோயம்புத்தூர் | ரூ.310 (GST 18% நீஙகலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங, திண்டுக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **276, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.23**

சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலை மிக வேகமாக பரவி வருவதால் அதனை தடுக்கும் பொருட்டு பல்வேறு தடுப்பு பணியினை மேற்கொண்டு வரும் நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களின் (DBC) நலனை பாதுகாக்கும் பொருட்டு அவர்களுக்கு தேவையான 300 ஜோடி கையுறைகள் (Resuable ) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.**
**3. தனி அதிகாரி மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **277, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.24**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா இரண்டாம் அலை தீவிரமாக பரவி வருகின்ற சூழ்நிலையில் தற்போது சின்னமனூர் நகராட்சி பகுதியில் பெருந் தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் விவரஙகள் அடஙகிய ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என அறிவுறுத்தி வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி ஸ்டிக்கர் 200 எண்ணம் அச்சிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.4900/– வழஙக கேட்டுக் கொண்டதை தொடர்ந்து மேற்படி தொகையினை ஸ்ரீ கமலி கம்ப்யூட்டர் பிரஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட செலவினத்தை தனி அதிகாரி (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகுவதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.0454/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **278, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.25**

இந்நகராட்சியில் ஆணையாளர் அறை மற்றும் நகர்மன்றக் கூட்ட அரஙகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் புகைப்படத்தினை நல்ல முறையில் பிரேம் செய்து மாட்டப்பட்டது. மேலும் புகைப்படம் தயார் செய்து மாட்டிய வகையில் தொகை ரூ.9900/–ஐ இந்நகராட்சியின் திரு.V.முத்துவேல், குடிநீர் பணி மேற்பார்வையாளர் அவர்களால் செலவிடப்பட்டுள்ளது. மேற்படி அன்னார்க்கு இத்தொகையினை திரும்ப வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்காணும் செலவினை தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1921/2021/இ2)**

**தீர்மான எண், நாள்** **279, நாள். 31.05.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.26**

சின்னமனூர் பேரூராட்சி 01.04.1977 முதுல் 3–ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, 1984 முதுல் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தொடர்ந்து 2–ஆம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகராட்சி 25.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவினை கொண்டுள்ளது. 2011ம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 42305 ஆகும். நகர் வாழ் பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் நகரிலிருந்து 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள வேம்படி களத்தில் கட்டப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையத்தில், பெரியாற்றின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள நீர் உறிஞ்சு கிணறுகளிலிருந்து (Infiltration wells) நீர் சேகரம் செய்யும் கிணற்றுக்கு (Collection wells) கொண்டு வரப்பட்டு, 4.89 கி.மீட்டர் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் மேல்நிலைத்

தொட்டிகளுக்கு நீர் பம்ப் செய்யப்பட்டு, அங்கிருந்து நகர்வாழ் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு தலைமை நீரேற்று நிலையத்தில் 40 குதிரை வேக மின் மோட்டார்கள் 3 எண்ணம், 30 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம், நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 20 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம், 15 குதிரை வேக மின் மோட்டார் 2 எண்ணம் மற்றும் 5 குதிரை வேக மின் மோட்டார் 1 எண்ணம் அமைக்கப்பட்டுள்ளதுடன், தலைமை நீரேற்று நிலையத்தில் நீர் உறிஞ்சு கிணறுகளில் 5 குதிரை வேக திறன் கொண்ட நீர் மூழ்கி மோட்டார்கள் 12 எண்ணம் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்ய 35 எண்ணம் பொதுக் குழாய்கள் (Public Fountation) அமைக்கப்பட்டுள்ளன.

நகர் வாழ் பொது மக்களின் குடிநீர் தேவை தவிர்த்து பிற தேவைகளை பூர்த்தி செய்ய நகரில் 76 எண்ணம் மின் பவர் பம்ப் அமைக்கப்பட்டுள்ளதுடன், 121 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் (Hand Pump) அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு பிரதானக் குழாய்களும், 34.900 கி.மீட்டர் நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் பதிக்கப்பட்டு குடிநீர் விநியோகப் பணி (Pumping Main and Distribution Main) அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பணிக்கு நாளது தேதியில் 2 மின் பணியாளர்கள் (Electrician) 1 குழாய் பொருத்துநர் மற்றும் 1 மதகு திறப்பாளர் (Turn Cock) பணியிடங்கள் மட்டுமே நடைமுறையில் உள்ளன. சீப்பாலக்கோட்டை ரோட்டில் அமைந்துள்ள தண்ணீர் தொட்டிக்கும், குருக்கள் பள்ளித் தெருவில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும், வேம்படி களத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கும் (Water Tank, FIlter Bed and Water Supply Head works) பகல் மற்றும் இரவு காவல் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லை. மேலும் குடிநீர் விநியோக பொதுக் குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், பிரதானக் குழாய்கள், பகிர்மானக் குழாய்கள், மினி பவர் பம்ப்கள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்து சீரான குடிநீர் விநியோகம் நடைபெற போதுமான பணியாளர்கள் நகராட்சியில் நடைமுறையில் இல்லாததாலும், குடிநீர் விநியோக இடங்களில் பராமரிப்புப் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுவதாலும், மின் மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய பணியாளர்கள் தேவைப்படுவதாலும், போதிய பணியாளர்கள் பணியிடம் நடைமுறையில் இல்லாததால், மேற்படி பணிகளை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மேற்படி ஒப்பந்தப்பணிக்கு வழங்கப்பட்ட தொகை மே 2021 உடன் முடிவடைவதால் ஜீன் 2021 முதல் மேற்படி பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.** |
| | **2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **280, நாள். 31.05.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.27**

சின்னமனூர் நகராட்சி 27 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, நகரிலிருந்து 4.89 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேம்படி களத்தின் அருகில் உள்ள முல்லை பெரியாற்றிலிருந்து குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதாவது முல்லை பெரியாரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள 5 நீர் உறிஞ்சி கிணறுகளின் அடியில் பொருத்தப்பட்டுள்ளன. 7.5 குதிரைத் திறன் மற்றும் 5.0 குதிரைத் திறன் கொண்ட 10 எண்ணம் மின் மோட்டார்களின் மூலம் குடிநீர் ஆற்றின் கரையில் மற்றும் 15 குதிரை திறன் சக்தி கொண்ட மோனோ பிளாக் மின் மோட்டார்கள் இரண்டு தலைமை நீரேற்று நிலையத்தில் கட்டப்பட்டுள்ள இரண்டு எண்ணம் நீர் சேகரம் செய்யும் தொட்டிக்கு (Sump) குடிநீர் சேகரம் செய்யப்பட்டு, மேற்படி இரண்டு தொட்டிகளிலிருந்து 75 குதிரை திறன் மற்றும் 50 குதிரைத் திறன் சக்தி கொண்ட நான்கு மின் மோட்டார்கள் மூலம் 4.89 கிலோ மீட்டர் தூரத்திற்கு பதிக்கப்பட்டு பிரதான குடிநீர் குழாய்கள் (Pumping Main from WS Head works to Filter Bed) மூலம் குடிநீர் பம்ப் செய்யப்பட்டு கல்யாண மண்டபம் பள்ளி அருகில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு, குடிநீர் சுத்திகரிக்கப்பட்டு, அங்குள்ள இரண்டு தரைமட்ட தொட்டிகளில் குடிநீர் சேகரம் செய்யப்பட்டு அங்கிருந்து சீப்பாலக்கோட்டை ரோட்டில், கிருஷ்ணய்யர் மேல்நிலைப்பள்ளிக்கு எதிர்புறம் அமைந்துள்ள மேல்நிலை மற்றும் தரைமட்ட தொட்டிகளுக்கு 40 குதிரை திறன் கொண்ட மூன்று மோட்டார்கள், 30 குதிரை திறன் கொண்ட ஒரு மோட்டார், 20 குதிரை திறன் கொண்ட இரண்டு மோட்டார்கள் மற்றும் 15 குதிரை திறன் கொண்ட 3 மோட்டார்கள் மூலம் குடிநீர் பம்ப் செய்யப்பட்டு, மேற்படி தொட்டிகளில் நிரப்பப்பட்டு, அங்கிருந்து நகர்ப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின் மோட்டார்கள் மற்றும் நகரில் உள்ள மினி பவர் பம்புகள் 76 எண்ணம் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் அவ்வப்போது சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம், தடையின்றி பொது மக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

எனவே, மேற்படி பணியினை 2021–2022ம் ஆண்டிற்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ளும் பொருட்டு, அவ்வப்போது குடிநீர் பணிக்காக பொருத்தப்பட்டுள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் மினி பவர் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க வேண்டியும், மேற்படி மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளிகள் பெற்று பழுதுப் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1303/2021/இ2)

தீர்மான எண், நாள் 281, நாள். 31.05.2021

தீர்மானம்

*******

**பொருள் எண்.28**

சின்னமனூர் நகராட்சியிலிருந்து கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய வருடாந்திர நகராட்சி பங்களிப்புத் தொகையினை அரசாணை நிலை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.04.2021ன்படி இரண்டாம் நிலை நகராட்சிகளுக்கு மேற்படி நகராட்சி பங்குத் தொகையினை ரூ.30000/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, 2020–2021–ஆம் நிதியாண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வருடாந்திர நகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.30000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1857/2021/சி1)

**தீர்மான எண், நாள்** 282, நாள். 31.05.2021

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.29**

சின்னமனூர் நகராட்சிப் பகுதியில் கொரோனா (COVID- 19) வைரஸ் தொற்று நோய் இரண்டாம் அலை வேகமாக பரவி வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நோய் தொற்று பரவாமல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தொற்று பாதித்த கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் தடுப்பு அரண் (Baricade) மற்றும் விழிப்புணர்வு பேனர் அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் திரு.கே.வனராஜ் அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மேற்படி செலவினத்தை கோவிட்–19 மாநில பேரிடர் மறுமொழி நிதியின் (State Disaster Response Fund)-இன் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வனராஜ் என்பவருக்கு வேலை உத்திரவு வழங்கலாம். (ந.க.எண்.1223/2020/இ1)

**தீர்மான எண், நாள்** 283, நாள். 31.05.2021

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.30**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் பணிபுரியும் பணியாளரின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு தேவையான 100 எண்ணம் முழு பாதுகாப்பு உடற்கவசம் வாங்கும் பணிக்கு 27.05.2021ம் அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | MSKSVM Traders & Agencies, Boothipuram (Po), Theni | ரூ.680/– (GST நீங்கலாக) |
| 2. | Sunshine Chemicals, Genguvarpatti, Theni | ரூ.750/– (GST நீங்கலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** குறைவான விலைப்புள்ளி அளித்த **M/s MSKSVM Traders & Agencies, Boothipuram, Theni** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1765/2021/எச்1)

**தீர்மான எண், நாள்** 284, நாள். 31.05.2021

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.31**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வேகமாக பரவிவரும் கொரோனா தொற்றின் இரண்டாம் அலையினை கட்டுப்படுத்த பல்வேறு தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சூழ்நிலையில் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கும் விதமாக கொரோனா தொற்று அதிகம் உள்ள பகுதிகள் மற்றும் நகராட்சியின் எல்லை பகுதிகளில் தினந்தோறும் கபசுர குடிநீர் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து சுகாதார ஆய்வாளர் அவர்களின் அறிவுரையின்படி 300 கிலோ கபசுர குடிநீர் பவுடர் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள்** 285, நாள். 31.05.2021

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.32**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் வீடு வீடாகச் சென்று கொரோனா தொற்றுக்கான அறிகுறி மற்றும் காய்ச்சல் உள்ளவர்களை கண்டறிய தேவையான Thermal Scanner and Pulse Oxymeter வாங்கும் பணிக்கு **27.05.2021** ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | JOJNFOCOM, Anna Nagar, Madurai | 1.Thermal Scanner – Rs.4720<br>2. Pulse Oxymeter – Rs.2950<br>(GST உட்பட) |
| 2. | Thiraviyam Infotech, Thirupalai, Madurai | 1.Thermal Scanner – Rs.5310<br>2. Pulse Oxymeter – Rs.3422<br>(GST உட்பட) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த M/s JOJNFOCUM, Madurai என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **286, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.33**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிட இனங்களுக்கு நகராட்சியின் மூலம் கட்டிட அனுமதி வழங்குவதற்கு, உரிய விதிமுறைகளின்படி கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொருட்டு **18.03.2021**ம் தேதிய விண்ணப்பத்தில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் **2019–**இன்படி (அரசு ஆணை எண்.(எம்.எஸ்).18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019) திரு.ஆர்.கார்த்திக் என்பவர் (புதியதாக கட்டிட வரைபட பொறியாளர் கிரேட்-III நிலையில் பதிவு செய்வதற்கு) விண்ணப்பித்துள்ளார். மேற்படி வரப்பெற்ற விண்ணப்பதாரரின் அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதின் அடிப்படையில், அன்னாரை கட்டிட வரைபட பொறியாளர் (Grade-III) நிலை –III ஆக பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **287, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.34**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் பணிபுரியும் பணியாளர்களின் நலனுக்காக கைகழுவும் திரவம் (Hand Sanitizer) வாங்கும் பணிக்கு **28.05.2021**–ஆம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விவரப்படியான விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வஎண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ கருப்பசாமி உற்பத்தி மற்றும் முகவர், பூதிப்புரம், தேனி (120ML பாட்டில்) | ரூ.95/ (GST நீங்கலாக) |
| 2. | கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ், சின்னமனூர் (120ML பாட்டில்) | ரூ.80.95/ (GST நீங்கலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **288, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.35**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா தடுப்பு பணியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தேவையான கையுறை (Hand Gloves) வாங்க விலைப்புள்ளிகள் 28.05.2021–ஆம் தேதியன்று வரப்பெற்ற விவரம் கீழ்க்கண்ட விவரப்படி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வஎண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ், சின்னமனூர் | ரூ.114/– (GST நீங்கலாக) |
| 2. | ஸ்ரீ கருப்பசாமி உற்பத்தி மற்றும் முகவர், பூதிப்புரம், தேனி | ரூ.135/– (GST நீங்கலாக) |

**அலுவலகக் குறிப்பு:–** **குறைவான விலைப்புள்ளி அளித்த கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ், சின்னமனூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1795/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **289, நாள். 31.05.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.36**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் உள்ள குறுக்குத் தெருக்களில் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் இல்லாமல் உள்ளதால் பொது மக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றன. இதனால் பள்ளிக்கோட்டைப்பட்டி குறுக்குத் தெருக்களில் குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.2108/2021/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **290, நாள். 31.05.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.37**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.27, பள்ளிக்கோட்டைபட்டியில் உள்ள மெயின் சாலையில் குடிநீர் விநியோக தேவைக்கு பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1861/2021/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **291, நாள். 31.05.2021** |
| **தீர்மானம்** | |

*******